


19. 10. 2025

தலைப்பு செய்திகள்

- தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளை ஒட்டி நாடுமுழுவதும் 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு குரல் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 103 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.
- வடகிழக்கு பருமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து மாநிலத்தின் நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.
- உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தோரில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

*************

அஷ்விணி வைஷ்ணவ்

பண்டிகை கால கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் நாடுமுழுவதும் 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ரயில் நிலையத்தை நேற்றிரவு நேரில் ஆய்வு செய்த அவர், ரயில்வே ஊழியர்கள் 24 மணி நேரமும் பணியாற்றி பயணிகளின் வசதியை உறுதி செய்வதாக கூறினார்.

இதனிடையே தமிழகத்தில் தீபாவளி பண்டிகை முடித்து பல்வேறு நகரங்களிலிருந்து ஊர் திரும்பும் பயணிகளின் வசதிக்காக நாளை மறுநாள்முதல் வரும் 23ஆம் தேதிவரை 15 ஆயிரத்து 129 பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

பேருந்து இயக்கம் குறித்த விவரங்களை அறிந்துகொள்ளவும், புகார் தெரிவிக்கவும் 94450 14436 என்ற எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்.

*************

வீரவணக்க நாள்

நாடுமுழுவதும், காவலர் வீரவணக்க நாள் நாளை மறுநாள் கடைபிடிக்கப்படுகிறது.

காவல் துறையினரின் தியாகம் மற்றும் அர்ப்பணிப்பை போற்றும் வகையில் புதுதில்லி தேசிய காவலர் நினைவு தூணில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் அன்றைய தினம் அஞ்சலி செலுத்த உள்ளார்.

1959-ம் ஆண்டு அக்டோபர் 21ஆம் தேதி லடாக் பகுதியில் தேச பாதுகாப்பு பணியில் வீர தீரத்துடன் ஈடுபட்டிருந்த 10 காவலர்கள் சீன ராணுவ படையினரின் திடீர் தாக்குதலில் உயிரிழந்ததை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் காவலர் வீரவணக்க நாளாக கடைபிடிக்கப்படுகிறது.

*************

தீபாவளி

தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்பதன் அவசியத்தை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் இந்நன்நாளில் அனைவரது வாழ்விலும், வளமும், நலமும் மகிழ்ச்சியும், பெருகட்டும் என்று வாழ்த்தியுள்ளார்.

மாநிலம் முழுவதும் தீபாவளி பண்டிகைக்கான பட்டாசு, ஜவுளி, இனிப்புகள் விற்பனை களைகட்டியுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விலை அதிகரித்துள்ளது.

மல்லிகை கிலோ 2 ஆயிரத்து 500க்கும், பிச்சிப்பூ ஆயிரத்து 750 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தர்மபுரி நகராட்சி சந்தையில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் 3 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை ஆகியுள்ளதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

மதுரை மாநகர பகுதிகளில் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்படுவதை அடுத்து அங்கு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதனிடையே கரூர் ஜவஹர் பஜார் பகுதியில் அனுமதியின்றி தரைக்கடைகள் அமைத்த 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்த பொருட்களை மாநகராட்சி நிர்வாகம் பறிமுதல் செய்தது.

சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடி பட்டி பறவைகள் சரணாலய பகுதியை சுற்றியுள்ள கிராம மக்கள் பட்டாசு இல்லா தீபாவளியை கடந்த 55 ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டாடி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

தேசிய பேரிடர் மீட்பு படை

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 180 தேசிய பேரிடர் மீட்பு படைவீரர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு செல்ல

தயார்நிலையில் உள்ளதாக தேசிய பேரிடர் மீட்பு படை பிரிவின் துணை கமாண்டன்ட் பிரவீன் பிரசாத் ராணிப்பேட்டையில் தெரிவித்துள்ளார்.

*************

பீஹார்

பீஹாரில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு முதற்கட்ட தேர்தல் வரும் 6-ம் தேதி நடைபெற உள்ள நிலையில் வேட்பு மனுக்களை திரும்பபெற நாளை கடைசிநாளாகும்.

இறுதி வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படும்.

பிஜேபி, காங்கிரஸ், ஐக்கிய ஜனதாதள் கட்சிகள் தங்களது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

மாநிலத்தில் வெளிப்படையான, நியாயமான தேர்தலை உறுதி செய்யும் வகையில், காவல்துறை மற்றும் அமலாக்கத்துறையினர் கடும் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 2 கோடியே 73 லட்ச ரூபாய் ரொக்கம் மற்றும் 12 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசு மற்றும் இலவச பொருட்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வரும் 11ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாளாகும்.

வாக்கு பதிவு நடைபெறும் தினத்தன்று அங்கு பொது விடுமுறை அளிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

*************

நோட்டரி பப்ளிக்

தமிழகம் உட்பட 4 மாநிலங்களில் நோட்டரி பப்ளிக் எனப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆவண சான்றளிப்பாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் நோட்டரி விதிகள் 1956 இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்படி தமிழகத்தில் நோட்டரி சான்றளிப்பாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 500லிருந்து 3-ஆயிரத்து 500ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மக்கள் தொகை பெருக்கம், வட்டம் மாவட்டங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாநிலங்களிடமிருந்து பெறப்பட்ட

கோரிக்கைகளின் அடிப்படையில் தமிழகம் ராஜஸ்தான் குஜராத் நாகலாந்து ஆகிய மாநிலங்களில் நோட்டிரிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான அறிவிக்கையை மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

************

மெட்ரோ ரயில்

உலகளாவிய மெட்ரோ ரயில் நிறுவனங்களின் சேவைகள் குறித்த தரவுகளை சேகரித்து அவற்றின் தர நிலைகளை நிர்ணயிக்கும் கோமெட் அமைப்பு சென்னை மெட்ரோ ரயில் நிலையத்திற்கு ஒட்டுமொத்த வாடிக்கையாளர்கள் திருப்தி அளித்துள்ளதாக அறிக்கை அளித்துள்ளது.

சென்னை மெட்ரோவிற்கு வாடிக்கையாளர்கள் 5க்கு 4.3 மதிப்பெண்கள் அளித்துள்ளதாக கோமெட் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள 32 மெட்ரோ நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இம்முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

************

விமான நிலையம்

விமான நிலையங்களில் பணியாற்றும் கட்டுப்பாட்டு அறை அதிகாரிகளுக்கு இணையவழி குரல் தகவல் தொடர்பு குறித்த பயிற்சி பெங்களூரு விமான நிலையத்தில் அளிக்கப்பட்டது.

இதன்மூலம் இந்திய வான்வெளியில் தடையற்ற நவீன திறம்பட செயல்படும் விமான போக்குவரத்து மேலாண்மை அமைப்பு உருவாக்கப்படும் என்றும், விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகளின் தொழில்நுட்ப திறன் மேம்பாடு உறுதி செய்யப்படும் என்றும் இந்திய விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது.

************

கீதா ஜீவன்

தமிழகத்தில் போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்ட 7 ஆயிரம் பேருக்கு 103 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் உள்ள 34 ஆயிரத்து 987 அரசு பள்ளிகளில் பயிலும் 20 லட்சம் குழந்தைகள் காலை உணவு திட்டத்தின் மூலம் பயன்பெற்றுவருவதாக கூறினார்.

கோவிட் தொற்று காலத்தில் பெற்றோரை இழந்த 13 ஆயிரத்து 364 குழந்தைகளுக்கு 27 லட்ச ரூபாய் கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

*************

நாமக்கல் கவிஞர்

விடுதலை போராட்ட வீரர் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளையின் 137-ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி நாமக்கல்லில் உள்ள அவரது நினைவில்லத்தில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

*************

மழை

தமிழகத்தில் வடகிழக்கு பருமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து பல்வேறு மாவட்டங்களில் அணைகள் மற்றும் நீர்நிலைகள் நிரம்பிவருகின்றன.

தேனி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக வைகை அணையின் நீர்மட்டம் 67 அடியை எட்டியுள்ளதை அடுத்து தேனி, மதுரை திண்டுக்கல் சிவகங்கை ராமநாதபுரம் மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈரோடு பவானிசாகர் அணை அதன் முழுகொள்ளவை எட்டும் தருவாயில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே குந்திபொம்மனூரில் குடியிருப்பு பகுதிக்குள் மழைநீர் புகுந்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 139.35 அடியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 10 ஆயிரத்து 374 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து ஆயிரத்து 500 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் இன்று 119 அடியாக உயர்ந்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 9 ஆயிரத்து 500 கன அடியாக உயர்ந்துள்ளது.

குற்றால அருவிகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க 4 ஆவது நாளாக தடை நீடிக்கிறது.

இதேபோல் கோவை குற்றாலத்திலும், நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியிலும் ஏற்பட்டுள்ள வெள்ளபெருக்கால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம் நடுவச்சேரி - நம்பியூர் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் அவிநாசி தீயணைப்பு மீட்புபடையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே திருமூர்த்திமலை அமணலிங்கேஸ்வரர் திருக்கோவிலை காற்றாற்று வெள்ளம் சூழ்ந்துள்ளது.

கன மழை காரணமாக மேட்டுப்பாளையும் உதகை இடையேயான மலை ரயில் போக்குவரத்து இன்று ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

விருதுநகர் மாவட்டம் அம்மையப்பபுரத்தில் நேற்றிரவு பெய்த கன மழை காரணமாக தனியார் அரிசி ஆலை மதில் சுவர் இடிந்து விழுந்ததில் 30 லட்ச ரூபாய் மதிப்பிலான நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகள் உயிரிழந்தன.

இச்சம்பவம் குறித்து தளவாய்புர காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

*************

கடத்தல்

துபாயிலிருந்து தூத்துக்குடி துறைமுகத்திற்கு பேரிச்சை பழ கண்டெய்னரில் கடத்திவரப்பட்ட 3 கோடியே 75 லட்ச ரூபாய் மதிப்பிலான சிகரெட் பெட்டிகளை மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

*************

வானிலை

தென்கிழக்கு வங்க கடலில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும் என்றும், இது அடுத்த 48 மணி நேரத்தில் மத்திய வங்க கடல் நோக்கி நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே கோவை நீலகிரி ஈரோடு திருப்பூர் தேனி தென்காசி நெல்லை கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

*************

மகளிர் கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தோரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

*************

கிரிக்கெட்

பெர்த்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 17ஆவது ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 52 ரன் எடுத்திருந்த நிலையில் மழையால் ஆட்டம் தடைபட்டுள்ளது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது